"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்." - குறள்-435.

பொருள்:- குற்றம் வராமல் காத்துக் கொள்ளாதவன் வாழ்வு. நெருப்பின்முன் வைக்கோல்போர் அழிவது போல் அழிந்துவிடும்







# தமிழ் எழில்

## கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு.

எழில் 07 | திருவள்ளுவர் ஆண்டு 2050 | இலக்கிய இதழ் முத்திங்கள். | சுறவம் - கும்பம்.


# என்தமிழே, உன்ஆட்சி நடக்கும் போதில் எங்கெங்கும் தென்றல்வரக் காணுகின்றோம்!

*"முதன்மைகள் தடுமாறவே புகழ்வாழ்வு இடிந்து சரிகிறது"*

அடிப்படையை உறுதியாகப் போட்டுக் கொண்டுதான் மேலே கட்டிடத்தைப் பெரிதாகக் கட்டி எழுப்பவேண்டும். கட்டிடத்தைப் பற்றிய இந்த உண்மை, ஓர் இனத்தின் வாழ்விற்கும் வளத்திற்கும் பெருமைக்கும் அப்படியே பொருந்துகிறது. அந்த இனத்துக்கு அடிப்படையான பண்புகள் எவை எவை என்று கணக்கிட்டுக் கண்டறிந்து அவைகளின் மீது வாழ்க்கை நடைமுறைகளைக் கட்டி எழுப்பும் போதுதான் அந்த இனத்தின் வாழ்க்கையே செழித்தோங்கிச் சீரோங்குகிறது.

அதாவது ஓர் இன மக்கள் பெரும் பெருமையும் பெற்றுத் துலங்க வேண்டுமானால், தாங்கள் செய்ய வேண்டியவைகளில் எது முதன்மையானது, எவைஎவை அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியவை என்னும் தெளிவும் அதை அப்படியே நடத்தி வைக்கின்ற திட்பத் துணிவும் அந்த இனத்து மக்களிடையே இருந்துவர வேண்டும்.

உலகத்தில் மூத்த இனம் என்று ஓதப்படுகிற தமிழ் இனம் கடந்த 2000 ஆண்டுகளாகவே சிறிதுசிறிதாகக் கரைந்து, உலக மக்களின் பார்வையில், வீரமும் மானமும் இல்லாத ஓர் உதவாக்கரைக் கும்பலாக ஒடுங்கிக் கொண்டு வருகிறது. இலங்கை விடுதலைப் போராட்டம் மட்டும்...

➤➤03

## தனிமனித ஒழுக்கம்.

இசைவான மனிதஉறவும் தனிமனித ஒழுக்கமும் முறையான உழைப்பும் இல்லாமல் எந்தவொரு நிறுவனமும் முன்னேற முடியாது. மனித உறவையும் தனிமனித ஒழுக்கத்தையும் முறையான உழைப்பிற்குரிய சூழலையும் வளர்த்தெடுக்காமல் ஒரு அரசு ஒரு நாட்டை மேம்படுத்த முடியாது. மனித உறவு என்பது வழி வழியாக வளர்க்கப்படுகின்ற ஒரு பண்பாட்டுக்கூறு. வயதில் பெரியவர்களை இளையவர்கள் மதிப்பதும் தலைமைப் பொறுப்பிலிருப்பவர்களை மற்றவர்கள் மதிப்பதும் தலைசிறந்த அறிஞர்களை மற்றவர்கள் மதிப்பதும் மனிதஉறவைப் போற்றிவளர்க்க உதவுகின்ற இன்றியமையாத இயல்புகள். இதைப்போலவே மேலே இருப்பவர்கள் கீழே இருப்பவர்களிடம் பரிவு காட்டுவதும் துன்பத்தில் இருப்பவர்க்கு அவர் கேளாமலேயே அந்தத் துன்பத்தை உணர்ந்தவர் ஓடிச்சென்று உதவுவதும் மேலும் மேலும் உயர்வுபெற வாய்ப்பு பெற்றவர்கள் எளியோரைக் கண்டு எக்காளம் போடாமல் தன்னடக்கத்தோடு நடந்துகொள்வதும் எதிர்பார்த்ததையெல்லாம் எய்தமுடியாதவர்கள் மற்றவர்கள் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படாமல் மனமகிழ்ச்சியோடு பாராட்டுவதும் மனித உறவை வளர்த்தெடுக்கப் பயன்படுகின்ற அருந்துணைகள்.

தனிமனித உரிமைகளைப்பற்றி ஏராளமாக எழுதியும் பேசியும், பழையமரபுகளிலிருந்த கட்டுக் கோப்புகள் எல்லாவற்றையும் அறுத்தெறிய முனைகின்ற இந்தக் காலத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள பொறுப்புக்களைப்பற்றியும் நிறையப் பேசவும் எழுதவும் வேண்டிய தேவை இப்போது மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது.

➤➤04

## அன்புள்ள தங்கை,

உன் புதிய வாழ்க்கை நல்லபடியே நடந்து வருகிறது என்று அம்மாவும், அப்பாவும் வந்து சொன்னது கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். எனக்கு உன்னைப் பற்றி நம்பிக்கை உண்டு. இளமையிலிருந்தே நீ அறிவும் திறமையும் அன்பும் பணிவும் உள்ள பெண்ணாக விளங்கியதைக் கண்டிருக்கிறேன் அல்லவா? அவற்றைக் கண்டிருப்பதால் உன் எதிர்காலம் நல்லபடி விளங்கும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. ஆயினும் சில்லறைப் பிடிவாதமும் குறும்பும் கொண்டு நீ

➤➤03

## காஞ்சித்திணை



## நல்ல உரைநடை எழுத வேண்டுமா?

### அறுத்தலும் அரிதலும்

பசுங்கன்று, ஆட்டுக்குட்டி என்பன போல் அறுத்தலும் அரிதலும் மரபு பற்றிய வேறுபாடுடையன. அரிவாள், அரிவாள் மணை போன்றவற்றால் துண்டிக்கப்படுவன அரிதல் எனப்படுகின்றன. வாள், கொடுவாள், கத்தரி போன்றவற்றால் துண்டிக்கப்படுவன அறுத்தல், வெட்டுதல் எனப்படுகின்றன.

(அ) மரத்தை வாளால் அறுத்தான்

(ஆ) காயை அரிவாள் மணையால் அரிந்தான்

இல்முன் முன்றில் என்று சொல்வது போல் அரிவாள், அரிவாள் மணை ஆயிற்று. மணை ஏறிய வாள் அறுவாள் ஆகாமல் அரிவாளாய் மாறிய அழகு காணீர்!

(இ) கிளையை கத்தியால் வெட்டினான்.

(ஈ) கரும்பை கொடுவாளால் வெட்டினாள்

கொடுவாள் - கோடிய வாள்

(உ) அரிவாளால் புல்லை அறுத்தான்

(ஊ) பூவை நகங்களால் கொய்தாள்.

இவையே மரபு முறைக்குட்பட்டன.

## பொன் மொழி



பார்ப்பான் ஆதிக்கமும், வேற்று நாட்டவர்களின் ஆட்சியும் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக நமது மக்களைக் கீழே தள்ளி மிதித்து வந்துள்ளன. அது காரணமாக அந்த ஏழை மக்கள்(திராவிட வழியினர்) தாங்களும் மனிதப் பிறவிகள் தாம் என்பதை மறந்தே போயினர். பார்ப்பனத் தொழில் இந்தியாவைப் பிடித்திருக்கும் ஒரு சனியன்.

விவேகானந்த அடிகளார்.

## செப்பும் மொழியைச் செப்பம் செய்வோம்.

### தாலி கட்ட மறந்தான்.

'கல்யாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்தான்' என்று உலக வழக்கில் பேசப்படுகிறது. எதை மறந்தாலும் தாலி கட்ட மறப்பதில்லை. மறந்த நிகழ்ச்சிகளும் இல்லை. பின் ஏன் இப்படியொரு சொற்றொடர் வந்தது? மணமக்களை மேடையில் அமர்த்தி சடங்குகள் நிகழும்போது ஒரு தட்டில் வெற்றிலை, பழம், தேங்காய் வைத்து அதன்மீது மஞ்சளும், குங்குமமும் தடவிய தாலியை வைப்பார்கள். இந்தத் தாலியை, மணமக்களை வாழ்த்த வந்திருக்கின்ற சான்றோர்களிடமும்,உறவினர்களிடமும் எடுத்துச்சென்று வாழ்த்துப் பெறுவது வழக்கம். அவ்வாறு செய்ய மறந்த போது, 'தாலி கட்ட மறந்தான்' என்று சொன்னார்கள். எனவே தாலி கட்ட மறந்தான் என்பது பிழை. தாலி காட்ட மறந்தான் என்பதே சரியானதாகும்...

➤➤02

## படிப்பும் கண்ணும்

சித்திரம்(படம்) வரைய எப்படி சுவர் அவசியமோ, அதுபோல படிப்பதற்குக் கண்கள் அவசியம். கண்கள் ஒத்துழைத்தால் மட்டுமே தொடர்ந்து படிக்கவும், எழுதவும் முடியும். கண்களில் ஏற்படும் வலி, கட்டி, எரிச்சல் போன்றவைகளால் கண்கள் பாதிப்படைகின்றன. எனவே தொடர் படிப்பும், வாசிப்பும் நிகழ வேண்டுமானால் கண்களை கவனமாகப் பாதுகாத்து வருவது அவசியம்.

நீண்ட நேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது, வீடியோ கேம்ஸ்களை விளையாடுவது, வீட்டை விட்டு வெளியில் சென்றால் போதும் என நண்பர்களோடு வெயிலில் சுற்றித் திரிவது, கண்ணைப் பாதிக்கும் அபாயகரமான விளையாட்டுகளை விளையாடுவது அல்லது அதுபோன்ற இடங்களில் கவனமின்றி..

➤➤02

## தமிழ்ச் சங்கத்தால் கடந்த ஆண்டு நடத்தப்பெற்ற நிகழ்வுகள். 2049(2018)

### திருவள்ளுவர் தொடர்புத்தாண்டும், திருவள்ளுவர் திருநாளும்.

இந்நிகழ்வு தி.ஆ 2049 தைத்திங்கள் 2 (2018.01.15) நாள் திருவள்ளுவர் சிலை அமைவிடத்தில் கொண்டாடப் பெற்றது. புதிதாக தெரிவு செய்யப்பெற்ற செயலாண்மைக்குழு உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்தனர். உறுப்பினர்கள் வள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

➤➤04

# மகனாக வாழ்க வள்தமிழ்க் கன்னிக்கு எமனாக வாழல் இழிவு

மூதறிஞர் வ.சுபமாணிக்கனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவள்ளுவர் தொடர் ஆண்டைப் பயன்படுத்துவோம்.

நம்முன்னோர் காலத்தை நொடி, நாளிகை, நாள், கிழமை, திங்கள், ஆண்டு, ஊழி என்று வாணியல் முறைப்படி வகுத்துள்ளனர். அவ்வாறே ஒருநாளை வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்றும் வகுத்துள்ளனர். ஒரு ஆண்டை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்றும் வகுத்துள்ளனர்.

இவ்வாறு காலக்கணக்கீடுகளில் கவனம் செலுத்திய நம்முன்னோர் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை குறிப்பதற்கு தாங்களுக்கென பொதுவான தொடர் ஆண்டுக் கணக்கைப் பின்பற்றாது வகுத்துக்கொள்ளாதது வருத்தத்திற்குரியதாகும். ஆனால் முசுலீம் தங்களுக்கென கிசிரி என்னும் தொடர் ஆண்டையும், பௌத்தர்கள் பௌத்த ஆண்டையும் பின்பற்றி வருகின்றனர். எனவே இந்தக்குறையை நீக்கும் வகையில் தமிழ் வாழ்வாகிய தமிழ்வளர்த்த சான்றோர்கள் 18.01.1935 ஆம் ஆண்டில் எடுத்த முடிவின்படி திருவள்ளுவர் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பகின்றது.

1972 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு இதழ்களிலும் 1981 முதல் அனைத்து பணிமனைகளிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஈழத்திலும், வீரகேசரி, வலம்புரி, உதயன் ஆகிய நாள் இதழ்களும் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்தமிழ்ச் சங்கமும் தனது விழா அழைப்பிதழ்களிலும், நாள் குறிப்புக்களிலும் நடைமுறைப்படுத்திவருகிறது.

எனவே உள்ளூராட்சி மன்றங்களையும், ஏனைய நிறுவனங்களையும் பொதுமக்களையும் தாம் பதிப்பிக்கும் அழைப்பிதழில் திருவள்ளுவர் தொடர் ஆண்டைப் பயன்படுத்தி திருவள்ளுவருக்கும், தமிழுக்கும் பெருமை சேர்க்குமாறு தமிழ்த்தாயின் பெயரால் வேண்டுகின்றோம்.




## சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே

### அறுவெறுப்பு

பார்த்தார் வெறுக்கத்தக்க - முற்றிலும் வெறுக்கத்தக்க ஒன்றே அறுவெறுப்பு ஆகும். "அற" என்பதற்கு முற்றிலும் என்ற பொருளும் உண்டு. (மற்றொரு பொருள் நீங்க என்தபகும்.) மனம் வெறுத்தொதுக்கும் செயல்களை, காட்சிகளை அறுவெறுக்கத்தக்கன என்று சொல்ல வேண்டும். அருவருப்பு பிழையான சொல்.

### ஒப்புரவு

உலக நடப்பு அறிந்து மற்றவரோடு ஒத்துவாழ்கின்ற பண்புதான் ஒப்புரவு எனப்படும். தம் நலத்தை விட்டுக் கொடுத்துப் பிறர் நலம் காப்பவர் ஒப்புரவாளர் எனப்பட்டனர். உலகத்தோடு ஒட்டி வாழ அறியாதவர் மிகக் கற்றும் பயனற்றவரே. ஒப்புரவு செய்தலினால் "கேடு" வருமென்றால் "அது" தன்னை விற்றும் அடையத்தக்கது என்றார் திருவள்ளுவர்.

## குறளோவியம்.



"என் வாழ்க்கைத் துணைவி வார்த்தெடுத்த தங்கப்பதுமை. இல்லறத்து முல்லைக்கொடி. தாமரை மலர்மீது இரு வண்டு அமர்ந்தாற்போல் அவள் விழிகள். கோத்து வைத்த முத்துமாலை அவள் விரிப்பு. இத்தனை உயர்வுடையாள் யாழெடுத்து மீட்டிவிட்டால் இத்தரை மீதினிலே யாருமில்லை என்பேன்.
தெங்கின் இளம்பாளைசுவைத்து வரும் தென்றல் உடலில் மோதும். அதை அந்த யாழ் வெல்லும் - என் துணைவி மீட்டுகின்ற யாழ் வெல்ல, இவ்வுலகில் யாருண்டு? எங்குமில்லை?"
"குயிலோசை கேட்டதுண்டு. கோதை நான் மீட்டுகின்ற யாழோசை எனக்கே தெவிட்டியதுண்டு, என் கொழுநன் வழங்குகின்ற அந்தக் குழலோசை சேர்த்த இன்பம் பேரின்பம் என்பேன்!

கூதிர் காலம் கொட்டுகின்ற பனிக் காற்றில் குளிரில்லை, என் கோமான் ஊதுகின்ற குழலோசை குளிர் வெள்ளம்!

யாழ் மீட்டும் துணைவி – குழலூதும் துணைவன் - ஒருவரையொருவர் புகழ்ந்தனர். வாழ்த்தினர். குழலையும், யாழையும் வெல்லக் குவலயத்தில் எதுவுமில்லையென்ற நினைப்போடு இருவரும் தழுவினர். பின் தம்மை மறந்தனர்.

குழல் இனிதா? யாழ் இனிதா? இரண்டையும்விட இனியது ஒன்றிருக்கிறது எனக் கண்டனர். அப்போதே அல்ல, ஓரிரு ஆண்டுகள் ஓடியபின்!

இரு மலர் - ஒரு மொட்டு என்று ஆகிவிட்டது குடும்பம் -

அன்புச் சின்னம் - அழகின் பெட்டகம் - அழித்தெழுதாச் சித்திரம் - அவர்கள் வீட்டில் நடமாடுகிறது-

தன் சிறு கையால் கூழை அளாவி அமிழ்தினும் இனிதாக்குகிறது. தன் மெய் தீண்டிய பெற்றோர்க்கு உடற்கின்பம் அளிக்கிறது.

'இதோ உங்களிருவரின் குழலையும் யாழையும் வெல்லுகின்ற மழலை மொழி' என அறைகூவல் விடுக்கிறது.

முற்றாத இதழ்களிலேயிருந்து முதிராத சொற்கள் உதிரும்போது யாழெங்கே குழலெங்கே – அனைத்தும் இந்த மழலைக்குப் பிறகுதான் என்று முடிவு கட்டுகின்றனர், துணைவனும் துணைவியும்.

இந்த இன்பத்தைத்தான் வள்ளுவர் இரு வரிகளில் எழுதிக் காட்டுகிறார்.

**"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்"**

## படிப்பும்..

இருப்பது ஆகியவைகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும். படிப்பதற்கு மேசை விளக்கைப் பயன்படுத்தும் போது அதன் வெளிச்சம் கண்களை உறுத்தாதவாறு புத்தகத்தில் மட்டும் படுமாறு அமைத்துக் கொள்ளலாம். மேசை விளக்கிற்கு 0 வாட்ஸ் பல்பை பயன்படுத்தினால் கண்களில் உறுத்தல், எரிச்சல் போன்றவை வராது. புத்தகத்திற்கும் கண்களுக்கும் இடையே சரியான இடைவெளி (1 முதல் 1½ அடி) இருப்பது அவசியம்.

தேர்வு சமயங்களில் தூக்கம் குறைவாகவும், விழிப்பு அதிகமாகவும் இருப்பதால் அச்சமயங்களில் கண்கள் சோர்வடையும். தொடர்ந்து நம்மோடு ஒத்துழைக்க மறுக்கும். தொடர் படிப்பிற்கிடையே-

ஒரு கைக்குட்டையை தண்ணீரில் நனைத்து வைத்துக்கொண்டு அவ்வவ்போது ஒற்றி எடுப்பதும்.

குறைந்தது இரண்டு முறையாவது கண்களை சுத்தமான நீரில் கழுவுவதும்.

வெள்ளரி போன்ற நீர்ச்சத்து நிறைந்த குளிர்ச்சி தரக்கூடிய காய்களை மெல்லிய தண்டுகளாக நறுக்கி கண்களின் மீது வைத்துக்கொண்டு சில நிமிடங்கள் அமைதியாக இருப்பதும்.

ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறையோ அல்லது கண்கள் தளர்வடையும்போதோ கண்களை மூடிஒர் ஐந்து நிமிடங்கள் ஓய்வு கொடுப்பதும்.

அவ்வவ்போது எடுத்துக்கொள்ளும் இடைவேளை நேரத்தில் இயற்கையை இரசித்தபடி உலாவுவதும்.

இரவில் தூங்கச் செல்லும் முன் நல்ல பன்னீரில் இரண்டொரு சொட்டுகள் கண்களில் விட்டுக் கொள்வதும் - கண்களை சோர்வுன்றி வைத்திருக்க உதவும்.

இவை தவிர, நம் முன்னோர்கள் சொல்லி நாம் செய்ய மறுத்து நிற்கின்ற எண்ணெய்க் குளியல், கறிவேப்பிலை, புதினா, கொத்துமல்லி ஆகிய வைட்டமின் - ஏ சார்ந்தவைகளைத் தூக்கி எறியாமல் சாப்பாட்டோடு சேர்த்து உண்ணுதல் ஆகியவைகளைத் தொடர்ந்து கடை பிடிப்பதும் நன்மை தரும்.

மு. கோபி சரபோயி.

## செப்பும் மொழியைச் செப்பம்...

### திருவளர் செல்வன்.

திருமண அழைப்பிதழ்களில், 'திருவளர்ச் செல்வன்', திருநிறைச்செல்வி என்று எழுதுவதைக் காண்கிறோம்.

ஆனால் இலக்கணம் பயிலாத பாமரர்கள் கூட 'ஊறுகாய்' என்று கூறுவதைக் கேட்கிறோம். அவர்கள் 'ஊறுக்காய்' என்று சொல்லுவதில்லை. 'ஊறுகாய்' என்ற சொல்லிற்கு 'ஊறியகாய்', 'ஊறுகின்றகாய்', ஊறும்காய்' என்று பொருள்.

'ஊறு' என்னும் சொல்லில் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலமும் வெளிப்படையாகத் தோன்றாமல், மறைந்து நிற்கின்றன. இதனை இலக்கணக்காரர்கள் வினைத்தொகை என்பர்.

திரு (செல்வம் உள்ளிட்ட அனைத்து நலன்களும்) வளர்வதும், நிறைவதும் முக்காலத்திலும் நிகழ வேண்டுமல்லவா! எனவே திருவளர் செல்வன், திருநிறைசெல்வி என்று எழுதுவதே சரியாகும்.

## திருக்குறள் வினா விடை

**ஒரு நேர்முகத்தேர்வில் எவற்றைக் கவனிக்க வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

தெரிவிற்குரிய தகுதி.

1. நல்ல குடிப்பிறப்பு
2. குற்றம் எதுவும் இழைக்காமை (குறள் 502)
3. பழிக்காத நாணம் (குறள் 502)
4. அன்பு,அறிவு, தெரிவில் உறுதி பேராசை இன்மை (குறள் 513)
5. ஒருவரிடம் குணங்கள் மிகுதியா, குற்றங்கள் மிகுதியா என்பதை, அறிந்து தெரிவு செய்தல் (குறள் 504-511)
6. உறவை முன்னிறுத்தித் தெரிவு செய்தல் துன்பம் தரும். (குறள் 507)
7. நன்கு பலமுறை விசாரித்த பின் தெரிவு செய்தல் நல்லது.

அவ்வாறு செய்யாமையும் செய்தபின் ஐயுறுவதும் இடர்களைத் தரும். (குறள் 510)

தொகுப்பு: வே.இறைபிள்ளை

# எவ்வளவு திறமையாகக் காரியம் செய்தாலும் தொடர்ச்சி இல்லையானால் பயன் இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *தங்கைக்கு,*

வீட்டில் தொல்லை கொடுத்த நாட்களையும் நான் மறக்கவில்லை. அப்போதெல்லாம் அம்மா உன்னைக் கடிந்து சொன்ன சொற்களும் வைது உரைத்த உரைகளும் நான் கேட்டிருக்கிறேன் அல்லவா? அவற்றை உரைத்த அன்னையின் வாயால் இன்று உன் இல்வாழ்க்கையைப் பற்றிப் புகழுரைகளும் கேட்கிறேன் என்றால், நான் பெருமை கொள்ளாதிருக்க முடியுமா? அழகிலும் திறமையிலும் பெயர் பெற்ற என் தங்கை, இன்றுதான் புதிய வாழ்க்கையில் அன்பும் பணிவும் அணிகலன்களாகப் பூண்டு விளங்குகின்றாள் என்று கேள்வியுற்று என் உள்ளம் பெருமிதம் கொண்டது. வாழ்க உன் நற்பண்புகள்.

இவ்வாறு உவகை நிறைந்த உள்ளத்தோடுதான் பின் வரும் அறிவுரைகளை எழுதுகின்றேன். அறிவுரைகள் எழுதுவதைக் கண்டதும், உன்னிடத்தில் ஏதோ குறைகண்டு எழுதினேன் என்றோ கேள்விப்பட்டு எழுதினேன் என்றோ எண்ணிவிட வேண்டா. குறை இருந்தால் தான் அறிவுரை கூறவேண்டும் என்பதில்லை. குறை நேராமலிருக்க வேண்டும் என்றும் அறிவுரை கூற வேண்டும் அல்லவா? அந்த வகையில்தான் என் கடமையைச் செய்ய முன் வருகின்றேன். எத்தனையோ படிக்கின்றாய், கேட்கின்றாய், இவற்றையும் படி, கேட்டுக்கொள். ஓய்வு இருக்கும்போது எண்ணிப்பார். அமைதியான உன் வாழ்க்கையை மட்டும் எண்ணுவது போதாது. உன்போல் இந்த நாட்டில் பிறந்து எத்தனையோ இடர்களுக்கும் சிக்கல்களுக்கும் ஆளாகியுள்ள மற்றப் பெண்களின் வாழ்க்கையையும் எண்ணிப்பார். ஒரு செம்மறியாடு முன்னே சென்று இடர்ப்பட்டால், பின்னே வரும் ஆடுகள் அதனைக் கண்டு ஒன்றும் திருத்துவதில்லை. பயனடைவதில்லை. முன்னே சென்றது விழுந்த பள்ளத்திலேயே எல்லாம் சென்று விழுமாம். மனிதராகிய நாம் ஏன் அப்படி விழவேண்டும்? ஆகையால் மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள குறைகளையும் அவற்றின் காரணங்களையும் எண்ணிப் பார்ப்பது நம்மை நாம் காத்துக் கொள்வதற்குமிகவும் பயன்படும். உண்மையாக ஆராய்ந்தால், இப்படி நேரே வாழ்க்கையைக் கற்பதுதான் உயர்ந்த கல்வி. இவ்வாறு வாழ்க்கையை நேரே கற்பதற்குப் பயன்படும் காரணத்தால் தான், 'பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படி, உயர்ந்த புலவர்களின் காவியங்களைப் படி' என்று உனக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறேன். இனிமேல் அவற்றை விடாமல் படி என்று வற்புறுத்துகிறேன். அதனால் விளையும் நன்மைகள் உண்டு. நம்மை அறியாமலே நம் மனம் அந்தப் பெரியோர்கள் நடந்த நெறியில் ஈடுபட்டு நடக்கும். நம்மை அறியாமலே நம் வாழ்க்கை செம்மையாக அமைந்துவிடும்.

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படி. பல முறை படி. குயூரி அம்மையாரின் வரலாற்றையும் கஸ்தூரிபாகாந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படி. இவை போன்றவற்றை மேன்மேலும் படித்துக் கொண்டிரு.

நல்லவர் நட்பு வளர்பிறை போல் வளரும் என்கிறார் திருவள்ளுவர். உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர்பிறை போல் வளர வேண்டும் என்று விரும்புகின்றேன். அது என் வாழ்த்துதலில் இல்லை, நீங்கள் வாழும் முறையில் இருக்கிறது.

நட்புக்காக பெரியோர் சொன்ன அத்தனையும் கணவன் மனைவி வாழ்க்கைக்கும் பொருந்தும். நாலடியாரின் ஒரு பாட்டுப் படித்திருக்கிறேன். அதில் தக்காரின் நட்பு கரும்பைக் குருத்திலிருந்து அடிவரையில் தின்றாற் போன்றது என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது, வரவர இனிமை மிகுந்து கொண்டு போகுமாம். ஆனால் தகாதவரின் நட்பு நேர்மாறாக இனிமை குறைந்து கொண்டு போகுமாம். அடிக்கரும்பை முதலில் கடித்துத் தின்று குருத்து வரையில் தின்பது போன்றதாம். காரணம் என்ன? அவரவர் பண்புதான். அதுபோல் நீங்கள் நல்ல பண்பு உடையவர்களாக விளங்கினால், கோலெடுத்து ஊன்றும் கிழவனும் கிழவியுமாக முதுமையுற்ற காலத்திலும் உங்கள் அன்பின் சிறப்பு வளர்ப்பதுதான் வளர்ந்து உள்ள நல்ல பண்பைக் காப்பது தான் உங்கள் கடமை என்பதை நன்றாக உணர்ந்துகொள்.

புதிதாகப் பழகும்போது பெரும்பாலோர் நன்றாகப் பழக முடியும். அதில் ஒன்றும் சிறப்பு இல்லை, திறமை இல்லை. புதிய மாணவர் ஒழுங்காக நடந்துகொள்வார். புதிய ஆசிரியர் பாடுபட்டுக் கற்றுக்கொடுப்பார். புதிய வேலைக்காரி நன்றாக உழைப்பாள். புதிய பால்காரன் நல்ல பால் தருவான். புதிய நட்பும் இனிமையாக விளங்கும். அதில் ஒரு சிறப்பும் இல்லை இந்தப் புதுமையை எள்ளி நகையாடுவது போல் ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருப்பது உனக்கு நன்கு தெரியும். **"புதிய துடைப்பம் நன்றாகப் பெருக்கும்"** என்னும் அந்தப் பழமொழி வேடிக்கையாக இருந்தாலும், கருத்து உடையதுதான். அதற்கு மாறாக, எவ்வளவு பழமை ஆன போதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை என்று சொல்வேன். இக்காலத்துப் பலருடைய வாழ்க்கை பொன்முலாம் பூசிய பொருள் போல் தொடக்கத்தில் மட்டும் ஒளி வீசுகின்றது. பழமைப்பட்டு தேயத் தேய, ஒளி இழந்து மங்குகின்றது. உண்மையான பொன்னால் செய்யப்பட்ட பொருள் ஒரு நாளும் அப்படி ஆகாது அல்லவா? பழகப் பழக, தேயத் தேய, அது குன்றா ஒளி வீசும் அல்லவா? அது போல் வாழும் வாழ்க்கையே நல்லவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

பழமைப்பட்ட பிறகும் விளங்குவதுதான் சிறந்த நட்பு என்னும் கருத்தோடு திருவள்ளுவர் நட்பைப் பற்றியும் நட்பாராய்தலைப் பற்றியும் பத்துப் பத்துக் குறளால் விளக்கிய பிறகு, பழமை என்று தனியே ஒரு பகுதி கூறுவதை நீ போற்றிக் கவனிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் சிறப்பில்லாத, தீ நட்பு, கூடா நட்பு என்பவைகளைப்பற்றி அவர் விளக்குகின்றார். பழமைப்பபட்ட பிறகும் மாசின்றி விளங்கும் நட்பை அவர், "அன்பின் வழிவந்த கேண்மை" என்ற அழகான தொடரால் குறிப்பிடுகின்றார். அந்த தொடரை நினைக்கும்போதும் சொல்லும்போதும் கேட்கும்போதும் திருவள்ளுவரின் தமிழ் அனுபவ அறிவிலிருந்து மலர்ந்த அறிவுரைத் தமிழ் என் நெஞ்சில் இனிக்கின்றது.

உன் கணவரை பற்றி எனக்கு போதிய அளவு தெரியாது. உன்னைப்பற்றி நன்றாக தெரியும். ஆகையால் உனக்குத்தான் அறிவுரை சொல்ல என்னால் முடியும். என் அறிவுரை, வாழ்த்துரை இரண்டும் ஒன்றுதான். உங்கள் வாழ்க்கை "அன்பின் வழிவந்த கேண்மை" யாக விளங்குவதாக!

அன்புள்ள அண்ணன்,
வளவன்

நூல் தங்கைக்கு - முனைவர் மு.வரதராசன்..

## தமிழ் அறிவோம்.

Honour – நன்மதிப்பு
Honourable – மாண்புமிகு, மேதகு
Honouring – மதிப்பளித்தல்,சிறப்புச் செய்தல்
Hood – முகப்புமூடி, உட்கூரை
Hoot Meal – குளம்புத்தூள்,குளம்பு எரு
Hours Of Work – வேலை நேரம்.
Hour – ஒருமணி.
Minute – நிமையம்.
House – வீடு,மனை,இல்லம்
House Allowance – வீட்டுவசதிப்படி
House agent – வீட்டுமுகவர், வீட்டுத்தரகர்.
House bee – வீட்டுத்தேனி
House Community – வீட்டுக் குமுகம்.
House Deainage – மனைவடிகால்.
House Dog – வீட்டுக் காவல்நாய்.

அருண்கலைச் சொற்களஞ்சியம்,
தமிழ் பல்கலைக் கழகம்.

## வடசொல் தமிழ்ச் சொல் அகரவரிசைச் சுருக்கம்.

ஆசீர்வதிக்க – வாழ்த்த
ஆலயம் - கோவில்
ஆதிவாரம் - ஞாயிற்றுக்கிழமை
இலக்கணம் - ஓரை,பொழுது
கல்யாணம் - திருமணம்
சகிதம் - உடன் ஒடு
சாந்தி – அமைதி
உபசரணை –பணிவிடை, முகமன்.
சுபதினம் - நன்னாள்.
சுபவேளை – நற்பொழுது.
சுவாமிகள் - அடிகள்
சிரேஸ்டன் - மூத்தோன், தலைமகன்.
சோமவாரம் - திங்கட்கிழமை.
சனங்கள் - மக்கள்.
தம்பதிகள் - மணமக்கள், இணையர்.
திதி – ஓரை
தினம் - நாள்.
திருமாங்கல்யதாரணம் - திருநாண்பூட்டு.
நட்சத்திரம் - நாள், மீன்.
நிச்சயித்து – உறுதிசெய்து, தீர்மானித்து.
பத்திரிகை - இதழ்,மடல்.
பிரகசபதி வாரம் - வியாழக்கிழமை.
மக்கள் வாரம் - செவ்வாய்க்கிழமை.

## உடையது விளம்பேல்

மொழியில் காலப்போக்கில் ஏற்படுகின்ற பொருள் மாற்றத்தாலும் இலக்கண மாற்றத்தாலும் சில தொடர்கள் தவறாக உணரப்பட்டுவிடுவது உண்டு அப்படித் தவறாக தவறாக உணரப்பட்ட தொடர்களுக்கு மொழி வரலாற்று ஆராய்ச்சிதான் சரியாக விளக்கம் தர முடியும்.

'உடையது விளம்பேல்' என்ற ஆத்திசூடித் தொடருக்குப் பொதுவாக எல்லோரும் கூறுகின்ற பொருள் உன்னிடம் இருப்பதை வெளியில் சொல்லாதே என்பதாம்.

உடையது – உன்னிடம் உடமையாக இருப்பது. விளம்பேல் - சொல்லாதே. இந்தப் பொருளில் இந்தத் தொடரை நாம் ஏற்றுக்கொள்ளும்போது நம்மிடம் இருப்பதைப் பிறருக்குத் தெரியாமல் மறைக்கின்ற குணந்தான் வளரும். அப்படி மறைக்கின்ற குணத்தைக் கள்ளம் அல்லது கரவு என்று சொல்லுவோம். கள்ளக்கரவுக்கு மனத்தில் இடம் ஏற்படும் போது அவனால் பிறரிடம் உண்மையான அன்போடு பழகமுடியாது. 'கள்ளங்கரவு' ஒருவனைச் சமுதாயத்திலிருந்து பிரித்துத் தனிமைப்படுத்திவிடும். உள்ளத்தைப் பிறர்க்குத் தெரியாமல் ஒளித்து வைக்கின்ற குணம் வளர வளர அப்படி ஒளித்து வைப்பவன் தன்னிடம் உள்ள பொருளைத் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் வழங்காமல் அந்தப் பொருளைப் பூதம் போல இருந்து காவல் காப்பவனாக மட்டுமே இருக்கிறான். ஆகவே இருப்பதனை வெளியில் செல்லாதே என்ற பொருள் அவ்வளவு சிறந்த பொருளாகவோ பொருத்தமான பொருளாகவோ தோன்றவில்லை.

இருப்பதை வெளியில் சொல்லாமல் ஒளித்து ஒளித்துப் பழகிவிட்டால், நாளடைவில் அந்தக் குணம் அவனுடைய வளர்ச்சிக்கே தடையாகிவிடும். தன்னிடம் இருக்கின்ற ஆற்றலைக்கூட வெளிப்படுத்தாமல் அடக்கி ஒளித்து அவன் அழிந்துவிடுகிறான். ஆகவே உடையது விளம்பேல் என்பதற்கு, இருப்பதை வெளியில் சொல்லாதே என்னும் பொருள் சற்றும் பொருந்தாது.

இருப்பது வெளியில் தெரிந்தால் திருடர்களால் அந்தப் பொருள் பறிக்கப்படுமோ என எண்ணி, இருப்பதை வெளியில் சொல்லாதே என்று அறிவுரை சொன்னதாக ஒரு விளக்கம் கூற முற்படலாம்.

ஆசிரியர்க்கு அது கருத்தாக இருந்தால் 'விளம்பேல்' என்று பொதுவாகச் சொல்லாமல் 'கள்வர்க்கு விளம்பேல்' என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்க வேண்டும்.

தொடரும்...

## *முதன்மைகள் தடுமாறவே..*

வெடித்திருக்காவிட்டால், இதற்குள் தமிழ் இனம் என்று ஒன்று இருக்கிறது என்பதையே உலகத்து மக்கள் மறந்திருப்பார்கள். அந்த அளவுக்கு இந்தியத் தமிழர்கள், - எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். எவை எவைகளுக்கு அடுத்தடுத்த இடங்கள் வழங்க வேண்டும் என்கிற திட்டவட்டச் செயல்முறைத் தெளிவே இல்லாமல் தலைகிறங்கி நிலைகுலைந்து கிடக்கிறார்கள்.

"மொழி இன்றி இனம் இல்லை, இனம் இன்றி ஒரு நாடு இல்லை, நாடு என்ற பொது அமைப்பு இல்லாவிட்டால் இனம், மொழி என்னும் இரண்டுக்கும் பாதுகாப்பு இல்லை." என்று கட்டுரைக்கிறான் ஓர் அறிஞன். "இமயமலை போல் உயர்ந்த ஒரு நாடும் தன் மொழியில் தாழ்ந்தால் வீழும் என்று அடித்துச் சொல்லுகிறான் தமிழர்களின் புரட்சிக்கவிஞன் - எனவே, "தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்" என்றும் அவன் அறுதியிட்டுச் சொல்லுகிறான்.

சாலய் இளந்திரயன்.

குறிப்பு :- தமிழாய்ந்த தமிழன் தான் நாடாளுமன்ற உறுப்பினராக வரவேண்டும்.

## எழுந்து நிற்கும் பேர்களுக்கே எட்டும் வானம்,
## எம்மொழி என்று உவப்பவர்க்கே வளரும் மானம்!

சாலை இளந்திரையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தனிமனித...

பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பவர்கள் உரிமை பற்றிப் பேசுவதில் பொருளில்லை. பொறுப்புணர்ச்சி இல்லாதவனிடத்தில் எழுகின்ற உரிமையுணர்ச்சி மிகப்பெரிய சமுதாயச் சுரண்டலே தவிர வேறொன்றுமில்லை.

பொறுப்புகளை நிறைவேற்றாமல் சாக்கு போக்கு சொல்லிவிட்டு ஒவ்வொருவனும் உரிமைபற்றி மட்டும் பேசினால் உரிமை எதுவும் கிடைக்காது. கலவரமும் குழப்பமும்தான் வரும். அளவுக்குமீறித் தனிமனித உரிமை பேசுவது மனித நல்லுறவை அழித்துவிடும். மனித நல்லுறவு அழிந்து போனால் மனிதக் கூட்டம் இருக்குமே தவிர சமுதாயம் இருக்காது. சமுதாயம் என்றால் அங்கே தனிமனித இசைவு இருக்கவேண்டும். ஒத்துணர்வு இருக்கவேண்டும். அவரவர் பொறுப்பை உணர்ந்து அவரவர் நடந்துகொள்ளவேண்டும். எடுத்ததற் கெல்லாம் சட்டத்தின் துணையை நாடமுடியாது.

இசைவான மனித உறவும் தனிமனித ஒழுக்கமும் உழைப்பின்மீது நம்பிக்கையும் எந்தச் சமுதாயத்தில் வேரூன்றிச் செழிப்பாக இருக்கின்றனவோ அந்தச் சமுதாயம் எப்படிப்பட்ட அறைகூவலையும் எதிர்கொண்டு முன்னேறி வெற்றி பெறும். ஒரு சமுதாயத்தில் மனித உறவும் தனிமனித ஒழுக்கமும் உழைப்பு நாட்டமும் சிதைந்து போனால் அந்தச் சமுதாயம் செல்வச்செழிப்பில் மிதந்தாலும் மிக விரைவில் வறுமைப்பிடியில் சிக்கிச் சீரழிந்து போய்விடும்.

தனிமனித ஒழுக்கம் என்பது தனக்குத்தானே ஒருவன் சமுதாய வாழ்க்கைக்கு இசைவாக வகுத்துக்கொள்ளுகின்ற நெறிமுறை. இப்படிப்பட்ட நெறிமுறை ஒருவரிடம் இல்லாமல்போனால் அவன் வாழ்க்கை மனித வாழ்க்கையாக இருக்காது. அவன் ஆடு, மாடுகள் போல வாழ்ந்து கொண்டிருப்பான். தனிமனித ஒழுக்கத்தை நூற்றுக்கு நூறு கடைப்பிடிக்கமுடியாமல் போனாலும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற தாகமாவது ஒருவனிடம் இருக்கவேண்டும். தனிமனித ஒழுக்கத்தில் அக்கறை காட்டாத ஒருவன் பொதுவாழ்க்கைக்குப் பொருத்தம் இல்லாதவன். எதிர்பாராத வகையில் பொது வாழ்க்கையில் புகுந்து பெரியபெரிய பொறுப்புக்களையுங்கூட அவன் பெற்றுவிடுகிறான். என்று வைத்துக் கொள்ளுவோம். தொலைநோக்கோடு பார்த்தால் அது அவனுக்கும் நல்லதல்ல, அவன் வாழும் சமுதாயத்துக்கும் நல்லதல்ல.

தனிமனித ஒழுக்கம் சரியாக இருந்தால்தான் மற்றவர்களிடம் உண்மையான மரியாதையை உருவாக்க முடியும். மரியாதை என்பது அடித்துப் பிடித்துப் பறித்துக் கொள்ளக்கூடிய பொருளல்ல. அது மற்றவர் நெஞ்சில் இயல்பாகப் பூப்போல மலரவேண்டும். எட்டாத தூரத்தில் உள்ள பெரியபெரிய வசதிகளுக்காக ஏங்குவதைவிட இருக்கிற இடத்தையே மகிழ்ச்சியோடு வாழத்தகுந்த இடமாக மாற்றியமைப்பதுதான் அறிவுடைமை. சுருக்கமாகச் சொன்னால் மனித உறவையும் தனிமனித ஒழுக்கத்தையும் உழைப்பையும் உணர்ந்து போற்றி மற்ற நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கிய நமது சமுதாயம் இன்றைய சூழலில் அவற்றை மீண்டும் வளர்த்தெடுத்து மக்கட்பண்பை வலுப்படுத்த வேண்டியிக்கிறது.

**'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்.'** (திருக்குறள்)

முனைவர் பொற்கோ.
நூல் இலக்கிய வெளிச்சம்

# தமிழ்ச் சங்கத்தால் கடந்த....

## உலக தாய்மொழிநாள் விழா

தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் உலகத்தாய்மொழி நாள் அம்பாள்குளம் விவேகானந்தா பள்ளியில் 2018.02.21 ஆம் நாள் நடாத்தப்பட்டது. பள்ளி முதல்வர் திருவாட்டி பொ.மாணிக்கவாசம் அவர்கள் ஏற்பாடுகளை சிறப்பாக ஏற்படுத்தி இருந்தார். வலயக்கல்வி பணிப்பாளர் யோன் குயின்சு வாழ்த்துரையை வழங்கினார். ஆசிரியர் குகபரன் சிறப்புரை ஆற்றினார். கவிதை, பேச்சு, தமிழ்தாய் வணக்கப்பாடல் என்பவற்றை பள்ளி மாணவர்கள் ஆற்றினார். அத்துடன் சங்கத்தலைவர்கள், நிறுவுனர், உறுப்பினர்கள் உரையாற்றினர்.

## கலைத்திறன் போட்டிகள், நாவண்மை

பளை, கண்டாவளை, கரைச்சிக் கோட்டப் போட்டிகள் 10ஆம், 11 ஆம் திங்களில்(மாதங்கள்) பளை நடுவன் கல்லூரி, முருகானந்தா கல்லூரி, கிளிநொச்சி உ.நி.பள்ளி என்பவற்றின் மண்டபங்களில் நடைபெற்றன.

## திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வு

மேற்கண்ட தேர்வு 40 பள்ளி மண்டபவங்களில் 2018.10.14 ஆம் நாள் நடைபெற்றது. தேர்வு மேற்பார்வையாளர்களாக பள்ளி ஆசிரியர்களும் சங்க உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

## மாவட்டநிலை கலைத்திறன் போட்டிகள்

மேற்கண்ட போட்டிகள் பரந்தன் உ.நி பள்ளியின் சுப்பையா நினைவு மண்டபத்தில் 2018.11.11 ஆம் நாள் நடைபெற்றன. காலையில் நாவண்மைப் போட்டிகளும் மாலையில் ஆடல், பாடல், நாடகம் ஆகிய போட்டிகள் நடாத்தப்பெற்றன.

## தமிழ்வளர்த்த சான்றோர் விழாவும், மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் நிகழ்வும் 'தமிழ் எழில்' இதழ் அறிமுக விழாவும்.

கரைச்சி கோட்ட நிகழ்வு கிளிநொச்சி இந்துக்கல்லூரி மண்டபத்தில் தி.ஆ 2049.05.17(2018.05.31) ஆம் நாளும் பளைக் கோட்ட நிகழ்வு தர்மகேணி அ.த.க பள்ளி மண்டபத்தில் 2049.05.17(2018.05.31) ஆம் நாளும் கண்டாவளைக் கோட்ட நிகழ்வு முருகானந்தா கல்லூரி மண்டபத்தில் தி.ஆ 2049.05.01(2018.05.30) ஆம் நாளும் பள்ளி முதல்வர்களின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. விழாவின் தொடக்கத்தில் நாவண்மை போட்டியும் வெற்றியீட்டிய மாணவர்கள், பெற்றோர்கள் தமிழ் வளர்த்த சான்றோர்களின் திருவுருவ படங்களுக்கு மாலை அணிந்தமை குறிப்பிடத்தக்கது.

## 16 ஆவது திருக்குறள் மாநாடு 2049(2019)

மேற்கண்ட நிகழ்வு இரண்டு நாள்கள் விழாவாக தி.அ 2049.06.23,24 (2018.07.07) ஆம் நாள்களில் பரந்தன் இந்து உ.நி.ப சுப்பையா நினைவு மண்டபத்தில் நடைபெற்றன. முதல் நாள் நிகழ்வு மேனாள் அரச ஆட்சியர் மக்கள் மாமணி கந்தையா பொன்னம்பலம் நினைவாக திருக்குறள் கருத்தரங்கும் 2ஆம் நாள் நிகழ்வு இலண்டன் மாநாகரை வாழ்விடமாகக் கொண்ட விமலதாசன் சந்திராதேவி இணையரின் அன்பு மகள் விமலதாசன் அபிராமி நினைவாக திருவள்ளுவர் விழாவும் பரிசில் வழங்கல் நன்மதிப்பு நிகழ்வும் நடைபெற்றன.

## அறிவோர் ஒன்றுகூடல்

திங்கள் தோறும் முதல் காரிக்கிழமை அன்று அறிவோர் ஒன்றுகூடலும் தமிழ் வளர்த்த சான்றோர்களின் நினைவரங்கமும் நடாத்தப் பெற்றன. இந்நிகழ்வுகளில் மாதாந்த தகவல்கள், தமிழ்அறிவோம் தமிழ் அவை என்பன இடம்பெற்றன.

### எது சரி?

| | | |
|---|---|---|
| 1.கோர்வை – பிழை<br>கோவை – சரி | 4.முகர்ந்து – பிழை<br>மோந்து – சரி | 7.எண்ணை – பிழை<br>எண்ணெய் – சரி |
| 2.கோர்த்து – பிழை<br>கோத்து – சரி | 5.சிகப்பு – பிழை<br>சிவப்பு – சரி | 8.அடமானம் – பிழை<br>அடைமானம் – சரி |
| 3.பதனீர் - பிழை<br>பதநீர் - சரி | 6.உடமை - பிழை<br>உடைமை - சரி | 9.அவைகளை - பிழை<br>அவற்றை - சரி |

# எண்ணிலடங்கா எத்தனையோ தமிழ் இருக்க கன்னித்தமிழ் வளர்க்க கம்பன்புகழ் எதற்கு?

மருத்துவர் நி.கி. அருமைநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org